செய்தி வெளியீடு எண் : 197 நாள் : 30.01.2023

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் சென்னை, அடையாறு – கூவம் ஆற்றை இணைக்கும் பக்கிங்காம் கால்வாயில், சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் புனரமைத்தல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.**

இன்று (30/01/2023) சென்னை, தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், சென்னை, அடையாறு – கூவம் ஆற்றை இணைக்கும் பக்கிங்காம் கால்வாயில் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் புனரமைத்தல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி, சுற்றுலா பொருட்காட்சி திடல் பின்பிருந்து மயிலாப்பூர் வரையிலான அடையாறு–கூவம் ஆற்றை இணைக்கும் பக்கிங்காம் கால்வாயினை புனரமைப்பு செய்து, அகலப்படுத்தி, கரையோரப் பகுதிகளில் உள்ள சுற்றுப் பகுதிகளை தூய்மைப்படுத்தி அழகுபடுத்துதல் தொடர்பாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., சென்னை நதிகள் சீரமைப்பு கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்வர்ணா, இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. கிர்லோஷ்குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. கோவிந்த ராவ், இ.ஆ.ப., தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய தலைவர் டாக்டர். ஜெயந்தி, இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி அமிர்தவல்லி இ.ஆ.ப. மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in